இனிமையான குழந்தைகளே! தனது வெற்றி, தோல்விக்கான சரித்திரத்தை நினைவு செய்யுங்கள், இது சுகம் மற்றும் துக்கத்தின் விளையாட்டாகும், இதில் முக்கால் பங்கு சுகம், கால் பங்கு துக்கம் இருக்கிறது, சரிசமமாகக் கிடையாது.

கேள்வி: இந்த எல்லையற்ற நாடகம் மிகவும் அதிசயமானது, எப்படி?

பதில்: இந்த எல்லையற்ற நாடகம் மிகவும் அதிசயமானது, முழு உலகில் ஒவ்வொரு விநாடியும் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அது மீண்டும் அவ்வாறே திரும்பவும் நடைபெறும். இந்த நாடகம் பேன் போன்று சுற்றிக் கொண்டிருக்கிறது, டிக் டிக் என்று சுற்றிக் கொண்டிருக்கிறது. ஒரு டிக் (விநாடி) போன்று அடுத்த (டிக்) விநாடி இருக்காது. அதனால் தான் இது மிகவும் அதிசயமான நாடகமாகும். மனிதனின் நடிப்புகள் என்னவெல்லாம் இருக்கிறதோ அதாவது நல்லதோ, கெட்டதோ அனைத்தும் பதிவாகியிருக்கிறது. இந்த விசயங்களை குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்திருக் கிறீர்கள்.

ஓம்சாந்தி. ஓம்சாந்தி என்பதன் பொருள் குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இப்பொழுது ஆத்ம அபிமானிகளாக ஆகியிருக்கிறீர்கள். ஆத்மா தனது அறிமுகம் கொடுக்கிறது - நான் ஆத்மா. ஆத்மாவின் சுயதர்மம் சாந்தி. இப்பொழுது அனைத்து ஆத்மாக்களும் வீடு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடாகும். வீட்டிற்குச் செல்லும் இந்த திட்டத்தைப் பற்றிக் கூறுவது யார்? அவசியம் தந்தை தான் கூறுவார். ஹே ஆத்மாக்களே! இப்பொழுது பழைய உலகம் அழிந்து போக வேண்டும். அனைத்து நடிகர்களும் வந்து விட்டனர். பாக்கி சில நடிகர்கள் தான் இருக்கின்றனர். இப்பொழுது அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். பிறகு நடிப்பு திரும்பவும் நடைபெறும். குழந்தைகளாகிய நீங்கள் உண்மையில் ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தினர் களாக இருந்தீர்கள், முதன் முதலில் சத்யுகத்திற்கு வந்தீர்கள், பிறகு பிறப்பு இறப்பில் வந்து வந்து இப்பொழுது மாற்றான் இராஜ்யத்திற்கு வந்து விட்டீர்கள். இதை உங்களது ஆத்மா மட்டுமே அறியுமே தவிர வேறு யாரும் அறியவில்லை. நீங்கள் ஒரு தந்தையின் குழந்தைகளாக இருக்கிறீர் கள். இனிமையிலும் இனிய குழந்தைகளுக்கு தந்தை கூறுகின்றார் - குழந்தைகளே! நீங்கள் இப்பொழுது மாற்றான் ராஜ்ஜியத்திற்கு வந்து விட்டீர்கள். தனது இராஜ்யத்தை இழந்து விட்டு அமர்ந்திருக்கிறீர்கள். சத்யுகத்தில் தேவி தேவதா தர்மத்தினர்களாக இருந்தீர்கள், 5 ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அரைகல்பம் நீங்கள் இராஜ்யம் செய்தீர்கள். ஏனெனில் ஏணியில் அவசியம் கீழே இறங்கத்தான் வேண்டும். சத்யுகத்திலிருந்து திரேதா பிறகு துவாபர கலியுகத்திற்கு வர வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். தனது வெற்றி தோல்விக்கான சரித்திரத்தை நினைவு செய்யுங்கள். நாம் சத்யுகத்தில் சதோ பிரதானமாக, சுக தாமத்தில் வசிப்பவர்களாக இருந்தோம் என்பதை குழந்தைகள் அறிவர். பிறகு பிறப்பு எடுத்து எடுத்து துக்கதாமத்தில் இற்றுப் போன நிலைக்கு வந்தடைந்து விட்டோம். இப்பொழுது மீண்டும் ஆத்மாக்களாகிய உங்களுக்கு தந்தையிட மிருந்து ஸ்ரீமத் கிடைக்கிறது. ஏனெனில் ஆத்மா பரமாத்மாவைப் பிரிந்து ....... குழந்தைகளாகிய நீங்கள் வெகு காலம் தனிமையாக ஆகிவிட்டீர்கள். முதன் முதலில் நீங்கள் தான் பிரிந்தீர்கள், பிறகு சுகத்தின் பாகத்தை நடித்து வந்தீர்கள். பிறகு உங்களது இராஜ்ய பாக்கியம் அபகரிக்கப்

பட்டது. துக்கத்தின் பாகத்தில் வந்து விட்டீர்கள். இப்பொழுது குழந்கைதளாகிய நீங்கள் மீண்டும் சுகம் சாந்திக்கான இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும். உலகில் அமைதி நிலவ வேண்டும் என்று ஆத்மாக்கள் கூறுகின்றனர். இந்த நேரத்தில் தமோ பிரதானம் ஆன காரணத்தினால் உலகில் அசாந்தி நிலவுகிறது. இதுவும் சாந்தி, அசாந்தி, சுகம் துக்கத்திற்கான விளையாட்டாகும். 5 ஆயிரம் ஆண்டிற்கு முன்பு உலகில் அமைதி இருந்தது. மூலவதனம் என்றாலே சாந்திதாமம். எங்கு ஆத்மாக்கள் வசிக்கிறதோ அங்கு அசாந்திக்கான கேள்வியே கிடையாது. சத்யுகத்தில் அமைதி இருந்தது, பிறகு வீழ்ச்சி அடைந்து அடைந்து அசாந்தி ஆகிவிட்டது. இப்பொழுது உலகிலுள்ள அனைவரும் அமைதி விரும்புகின்றனர். பிரம்ம மகத்தத்துவத்தை உலகம் என்று கூறுவது கிடையாது. அதை பிரம்மாண்டம் என்று கூறப்படுகிறது. அங்கு ஆத்மாக்களாகிய நீங்கள் வசிக் கிறீர்கள். ஆத்மாவின் சுயதர்மம் சாந்தி ஆகும். சரீரத்திலிருந்து ஆத்மா விடுபடுவதன் மூலம் அமைதியாகி விடுகிறது. பிறகு சரீரம் எடுக்கும் பொழுது காரியங்களைச் செய்கிறது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் இங்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்? பாபா, தனது சாந்திதாமம், சுகதாமத் திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறீர்கள். சாந்தி என்றால் முக்திதாமத்தில் சுகம், துக்கத்திற்கான பாகம் கிடையாது. சத்யுகம் என்பது சுகதாமம், கலியுகம் என்பது துக்கதாமம். எவ்வாறு கீழே இறங்குகின்றோம்? அதை ஏணிப்படியில் காண்பிக்கிறோம். நீங்கள் ஏணிப்படியில் கீழே இறங்குகிறீர்கள், பிறகு ஒரே ஒரு முறை தான் ஏறுகிறீர்கள். தூய்மை அடைந்து ஏறுகிறீர்கள் மற்றும் தூய்மை இழந்து கீழே இறங்குகிறீர்கள். தூய்மை ஆகாமல் ஏற முடியாது, அதனால் தான் பாபா, வந்து எங்களை பாவனம் ஆக்குங்கள் என்று அழைக்கிறீர்கள்.

நீங்கள் முதலில் தூய்மையான சாந்திதாமத்திற்குச் சென்று பிறகு சுகதாமத்திற்கு வருவீர்கள். முதலில் சுகம், பிறகு துக்கம். சுகம் அதிகமாக அடைகிறீர்கள். சரிசமமாக இருந்தால் பிறகு எந்த லாபமும் இருக்காது. தவறானதாக ஆகிவிடுகிறது. தந்தை புரிய வைக்கிறார் – உருவாக்கப் பட்டிருக்கும் இந்த நாடகத்தில் முக்கால் பங்கு சுகமும், கால் பங்கு சிறிது துக்கமும் இருக்கிறது. அதனால் தான் இது சுகம், துக்கத்தின் விளையாட்டு என்று கூறப்படுகிறது. குழந்தைகளாகிய உங்களைத் தவிர தந்தையாகிய என்னை யாரும் அறிய முடியாது என்பதை தந்தை அறிவார். நான் தான் உங்களுக்கு எனது அறிமுகம் கொடுத்திருக்கிறேன், மேலும் சிருஷ்டியின் முதல், இடை, கடைசியின் அறிமுகமும் கொடுத்திருக்கிறேன். உங்களை நாஸ்திகத்திலிருந்து ஆஸ்திகனாக ஆக்கியிருக்கிறேன். மூன்று லோகங்களையும் நீங்கள் அறிவீர்கள். பாரதவாசிகள் கல்பத்தின் ஆயுளை அறியவில்லை. பாபா மீண்டும் நமக்கு கற்பிக்கிறார் என்பதை இப்பொழுது நீங்கள் அறிவீர்கள். தந்தை குப்தமான (மறைவான) வேஷத்தில் மாற்றான் தேசத்திற்கு வந்திருக்கிறார். பாபாவும் குப்தமானவர். மனிதர்கள் தங்களது தேகத்தை அறிந்திருக்கின்றனர், ஆத்மாவை அறிய வில்லை. ஆத்மா அழிவற்றது, தேகம் அழியக் கூடியது. ஆத்மா மற்றும் ஆத்மாவின் தந்தையை ஒருபொழுதும் நீங்கள் மறந்து விடக்கூடாது. நாம் எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைந்துக் கொண்டிருக்கிறோம். எப்பொழுது தூய்மையாக ஆகின்றோமோ அப்பொழுது தான் ஆஸ்தி கிடைக்கும். இந்த இராவண இராஜ்யத்தில் நீங்கள் தூய்மையின்றி இருக்கிறீர்கள், அதனால் தான் தந்தையை அழைக்கிறீர்கள். இரண்டு தந்தைகள் இருக்கின்றனர். பரம்பிதா

பரமாத்மா அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரே ஒரு தந்தை ஆவார். சகோதரர்கள் அனைவரும் தந்தை என்பது கிடையாது. எப்பொழுதெல்லாம் பாரதத்தில் தர்ம நிந்தனை அதிகம் ஏற்படுகிறதோ அப்பொழுது அனைத்து தர்மத்தினர் களுக்கும் பரலௌகீகத் தந்தையானவரை மறந்து விடுகிறீர்கள், அப்பொழுது தான் தந்தை வருகின்றார். இதுவும் விளையாட்டாகும். எதுவெல்லாம் நடைபெறுகிறதோ அந்த விளையாட்டு மீண்டும் நடைபெறும். ஆத்மாக்களாகிய நீங்கள் எவ்வளவு உயர்ந்த நடிப்பு நடிப்பதற் காக வருகிறீர்கள் மற்றும் செல்கிறீர்கள். இந்த அநாதி நாடகம் பேன் போன்று நகர்ந்து கொண்டே இருக்கிறது. ஒருபொழுதும் முடிவடைவது கிடையாது. டிக் டிக் என்று சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஆனால் ஒரு டிக் போன்று மற்றொரு டிக் இருக்காது. எவ்வளவு விநாடி வியப்பான நாடகமாகும்! விநாடிக்கு விநாடி உலகில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அவை மீண்டும் நடைபெறும். ஒவ்வொரு முக்கிய தர்மத்தின் தலைவர்களுக்கும் கூற வேண்டும். அவர்கள் அனைவரும் அவரவர்களது தர்ம ஸ்தாபனை செய்கின்றனர். இராஜ்யம் ஸ்தாபனை செய்வது கிடையாது. ஒரே ஒரு பரம்பிதா பரமாத்மா மட்டுமே தர்மத்தையும் ஸ்தாபனை செய்கிறார் மற்றும் இராஜ்யத்தையும் ஸ்தாபனை செய்கிறார். அவர்கள் தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றனர், அவர்களுக்குப் பின்னால் அனைவரும் வருகின்றனர். அனைவரையும் யார் திரும்ப அழைத்துச் செல்வது? தந்தை. சிலர் சிறிது நடிப்பு நடிக்கின்றனர், அவ்வளவு தான். எவ்வாறு புழு, பூச்சிகள் உருவாகின்றன, இறந்து விடுகின்றன! அவர்களுக்கு நாடகத்தின் விசயமே இல்லாமல் போய்விடுகிறது. கவனம் எதன் பக்கம் செல்கிறது? ஒன்று படைப்பவரின் பக்கம் செல்லும், அவரைத் தான் அனைவரும் ஓ இறைதந்தையே, ஹே பரம்பிதா பரமாத்மா என்று கூறுகின்றனர். அவர் அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாக இருக்கிறார். முன்பு ஆதிசனாதன தேவி தேவதா தர்மம் இருந்தது. இது எல்லையற்ற, மிகப் பெரிய மரம் ஆகும். எவ்வளவு கிளைகள்! எவ்வளவு வகையான பொருட்கள் வெளிப்பட்டிருக்கின்றன! கணக்கிடுவது கடினம் ஆகிவிடுகிறது. அஸ்தி வாரம் கிடையாது. மற்ற அனைத்தும் இருக்கின்றன. தந்தை கூறுகின்றார் - இனிமையிலும் இனிய குழந்தைகளே! எப்பொழுது ஒரு தர்மம் இன்றி பல தர்மங்கள் உருவாகி விடுகின்றனவோ அப்பொழுது தான் நான் வருகிறேன். அஸ்திவாரம் மறைந்து விட்டது. சிலைகள் (உருவம்) மட்டுமே இருக்கின்றன. ஆதி சனாதனத்தைச் சார்ந்தவர்கள் ஒரே தர்மத்துடன் இருந்தனர். மற்ற அனைத்தும் பின் நாட்களில் வருகின்றன. திரேதாவில் பலர் இருக்கின்றனர், அவர்கள் சொர்க்கத் திற்கு வருவது கிடையாது.

சொர்க்கம், புது உலகம் செல்ல வேண்டும் என்பதற்கான முயற்சியை இப்பொழுது நீங்கள் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். தந்தை கூறுகின்றார் - என்னை நினைவு செய்து தூய்மையானவர்களாக ஆகி மற்றும் தெய்வீக குணங்களைத் தாரணை செய்யும் பொழுது தான் நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும். மற்றபடி மரத்தின் கிளைகள், இலைகள் பல உள்ளன. குழந்தைகள் மரத்தைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள், நாம் அனைவரும் ஆதிசனாதன தேவி தேவதைகளாக சொர்க்கத்தில் இருந்தோம். இப்பொழுது சொர்க்கம் கிடையாது. இப்பொழுது நரகம் தான் இருக்கிறது. அதனால் தான் தந்தை கேள்வி கேட்கிறார் - நீங்கள் தங்களது உள்ளத்தில் கேளுங்கள், நாம் சத்யுக சொர்க்க வாசிகளா? அல்லது கலியுக நரகவாசிகளா? சத்யுகத்திலிருந்து

கீழே இறங்குகின்றோம், பிறகு மேலே எப்படிச் செல்வோம்? தந்தை கல்வி கொடுக்கிறார். நீங்கள் தமோ பிரதானத்திலிருந்து சதோ பிரதானமாக எப்படி ஆவீர்கள்? தன்னை ஆத்மா என்று உணர்ந்து என்னை நினைவு செய்தால் இந்த யோக அக்னியின் மூலம் உங்களது பாவங்கள் அழிந்து விடும். கல்பத்திற்கு முன்பும் உங்களுக்கு ஞானம் கற்றுக் கொடுத்து தேவதைகளாக ஆக்கியிருந்தேன், இப்பொழுது நீங்கள் தமோ பிரதானமாக ஆகியிருக்கிறீர்கள். பிறகு அவசியமாக யாராவது சதோ பிரதானம் ஆக்குபவர்கள் இருப்பர்! பதீத பாவனாக எந்த மனிதனும் இருக்க முடியாது. ஹே பதீத பாவன், ஹே பகவான் என்று கூறுகின்ற பொழுது புத்தி மேலே சென்று விடுகிறது. அவர் நிராகாரமானவர். மற்ற அனைவரும் நடிகர்கள் ஆவர். அனைவரும் மறுபிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கின்றனர். நான் பிறப்பு இறப்பில்லாதவன். இவ்வாறு நாடகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை யாரும் அறிய வில்லை. நீங்களும் அறியாமல் இருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் சுயதரிசன சக்கரதாரி என்று கூறப்படுகிறீர்கள். நீங்கள் தங்களது ஆத்மாவின் சுய தர்மத்தில் நிலைத்திருங்கள். தன்னை ஆத்மா என்ற நிச்சயம் செய்யுங்கள். தந்தை புரிய வைக்கிறார் - இந்த சிருஷ்டிச் சக்கரம் எவ்வாறு சுற்றுகிறது? ஆகையால் உங்களது பெயர் சுயதரிசன சக்கரதாரி, வேறு யாரிடத்திலும் இந்த ஞானம் கிடையாது. ஆக உங்களுக்கு அதிக குஷி இருக்க வேண்டும். தந்தை நமது ஆசிரியராகவும் இருக்கிறார். மிக இனிமையான பாபா ஆவார். பாபாவைப் போன்று இனிமையானவர் வேறு யாரும் கிடையாது. பரலௌகீகக் குழந்தைகளாகிய நீங்கள் பரலோகத்தில் இருக்கக் கூடிய ஆத்மாக்கள் ஆவீர்கள். தந்தையும் பரந்தாமத்தில் இருக்கிறார். எவ்வாறு லௌகீகத் தந்தை குழந்தைகளுக்கு பிறப்பு கொடுத்து, பாலனை (வளர்ப்பு) செய்து கடைசியில் அனைத்தும் கொடுத்து விட்டு சென்று விடுகிறார், ஏனெனில் குழந்தைகள் வாரிசாக இருக்கின்றனர். இது நியமம் ஆகும். நீங்கள் எல்லையற்ற தந்தையின் குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள், தந்தை கூறுகின்றார் - இப்பொழுது நீங்கள் மீண்டும் சப்தங்களைக் கடந்து வீட்டிற்குச் செல்ல வேண்டும். அங்கு இருப்பது அமைதி, பிறகு சைகை பிறகு பேச்சு சகோதரிகள் சூட்சும வதனத்திற்குச் செல்கின்றனர், சாட்சாத் காரம் ஏற்படுகிறது. ஆத்மா சென்று விடுவது கிடையாது. நாடகத்தில் என்ன பதிவாகியிருக்கிறதோ அது விநாடிக்கு விநாடி திரும்பவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு விநாடி போன்று மற்றொரு விநாடி இருக்காது. மனிதர்களின் நடிப்பு நல்லதோ கெட்டதோ அனைத்தும் பதிவாகி யிருக்கிறது. சத்யுகத்தில் நல்ல நடிப்பு, கலியுகத்தில் தீய நடிப்பு நடிக்கிறீர்கள். கலியுகத்தில் மனிதர்கள் துக்கமாக இருக்கின்றனர். இராம இராஜ்யத்தில் சீ சீ விசயங்கள் இருக்காது. இராம இராஜ்யம் மற்றும் இராவண இராஜ்யம் இரண்டும் ஒன்றாக சேர்ந்திருக்காது. நாடகத்தை அறியாத காரணத்தினால் சுகம், துக்கம் பரமாத்மா தான் கொடுக்கிறார் என்று கூறுகின்றனர். எவ்வாறு சிவபாபாவைப் பற்றி யாருக்கும் தெரியாதோ அதே போன்று இராவணன் பற்றியும் யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு ஆண்டும் சிவஜெயந்தி கொண்டாடுகின்றனர், அதே நேரம் இராவணனின் இறப்பையும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகின்றனர். இப்பொழுது எல்லையற்ற தந்தை தனது அறிமுகம் கொடுக்கிறார் - தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். தந்தை மிக இனிமையானவர். பாபா வந்து தனது மகிமையை கூறமாட்டார், யாருக்கு சுகம் கிடைக்கிறதோ

அவர்கள் தான் மகிமை செய்கின்றனர்.

குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. தந்தை அன்புக் கடலானவர். பிறகு சத்யுகத்தில் நீங்கள் அன்பானவர்களாக, இனிமையானவர்களாக ஆகிறீர்கள். அங்கும் விகாரங்கள் இருந்தன என்று யாராவது கூறினால் அங்கு இராவண இராஜ்யம் கிடையாது என்று கூறுங்கள். இராவண இராஜ்யம் துவாபர யுகத்திலிருந்து ஆரம்பமாகிறது. எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கிறார்! உலகின் சரித்திர பூகோளத்தை வேறு யாரும் அறியவேயில்லை. இந்த நேரத்தில் தான் உங்களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. பிறகு நீங்கள் தேவதைகளாக ஆகி விடுகிறீர்கள். தேவதைகளை விட உயர்ந்தவர்கள் வேறு யாரும் கிடையாது. ஆகையால் அங்கு குருவிடம் செல்ல வேண்டிய அவசியமில்லை. இங்கு பல குருக்கள் உள்ளனர். சத்குரு ஒரே ஒருவர் தான். சத்குரு அகால் என்று சீக்கியர்களும் கூறுகின்றனர். அகால்மூரத் சத்குரு ஆவார். அவர் காலனுக்கெல்லாம் காலன் மகா காலன் ஆவார். அந்த காலன் ஒருவரைத் தான் அழைத்துச் செல்வார். நான் அனைவரையும் அழைத்துச் செல்வேன் என்று தந்தை கூறுகின்றார். தூய்மை யாக்கி முதலில் அனைவரையும் சாந்திதாமம் மற்றும் சுகதாமத்திற்கு அழைத்துச் செல்வேன். ஒருவேளை என்னுடையவராக ஆகி பிறகு மாயையினுடையவர் களாக ஆகிவிட்டால், குருவை நிந்திப்பவர்கள் உயர்ந்த பதவி அடைய முடியாது என்று கூறப்படுகிறது. அவர்களால் சொர்க்கத்தின் முழுமையான சுகம் அடைய முடியாது. பிரஜைகளாக சென்று விடுவர். தந்தை கூறுகின்றார் - குழந்தைகளே! எனக்கு அவப்பெயர் ஏற்படுத்தாதீர்கள். நான் உங்களை சொர்க்கத் திற்கு எஜமானர்களாக ஆக்குகிறேன் எனில் தெய்வீக குணங்களையும் தாரணை செய்ய வேண்டும். யாருக்கும் துக்கம் கொடுக்கக் கூடாது. தந்தை கூறுகின்றார் - உங்களை சுகதாமத்திற்கு எஜமானர்களாக ஆக்குவதற்காகவே நான் வந்திருக்கிறேன். தந்தை அன்புக் கடலானவர், மனிதர்கள் துக்கம் கொடுப்பதில் கடல் போன்றவர்களாக இருக்கின்றனர். காமத்தில் சென்று ஒருவருக் கொருவர் துக்கம் கொடுக்கின்றனர். அங்கு இந்த விசயங்கள் கிடையாது. அங்கு இருப்பதோ இராம இராஜ்யம். யோக பலத்தின் மூலம் குழந்தைகள் பிறக்கும். இந்த யோக பலத்தின் மூலம் நீங்கள் முழு உலகையும் தூய்மையாக ஆக்குகிறீர்கள். நீங்கள் போர் வீரர்கள் ஆனால் குப்தமாக இருக்கிறீர்கள். நீங்கள் மிகவும் பிரபலமானவர்களாக ஆகிறீர்கள், பிறகு பக்தி மார்க்கத்தில் தேவி களாகிய உங்களுக்கு எவ்வளவு கோயில்கள் கட்டுகின்றனர்! அமிர்த கலசத்தை தாய்மார்களின் தலை மீது வைக்கிறேன் என்று கூறுகின்றார். கோமாதா என்று கூறுகின்றனர், இது ஞானமாகும். தண்ணீருக்கான விசயம் கிடையாது. நீங்கள் சிவசக்தி சேனைகள். அவர்கள் இதையே நகல் செய்து எவ்வளவு பேர் குருக்களாக ஆகி அமர்ந்திருக்கின்றனர்! இப்பொழுது நீங்கள் சத்தியம் என்ற படகில் அமர்ந்திருக்கிறீர்கள். இறைவா! எனது படகை அக்கரைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று பாடுகின்றனர். அக்கரைக்குக் கொண்டு செல்லும் படகோட்டி இப்பொழுது கிடைத்திருக்கிறார். வைஷ்யாலயத்திலிருந்து சிவாலயத்திற்கு அழைத்துச் செல்கிறார். அவரை தோட்டக்காரன் என்றும் கூறுகிறோம், முட்கள் நிறைந்த காட்டை மலர் நிறைந்த தோட்டமாக ஆக்குகிறார். அங்கு சுகமே சுகம் தான். இங்கு துக்கம் தான் இருக்கிறது. எந்த நோட்டீஸ் பிரிண்ட் செய்யுமாறு பாபா கூறியிருந்தாரோ அதில் எழுதப்பட்டிருக்கிறது - சொர்க்கவாசியா? அல்லது நரகவாசியா? என்று தனது

உள்ளத்தில் கேளுங்கள். பல கேள்விகள் கேட்க முடியும். இழிவான நடத்தை என்று பலர் கூறுகின்றனர் எனில், ஏதே ஒரு நேரத்தில் மேன்மையான நடத்தை உள்ளவர்கள் இருந்திருக்க வேண்டும். அங்கு தேவதைகள் இருந்தனர், இப்பொழுது கிடையாது. எப்பொழுது தேவி தேவதா தர்மம் மறைந்து போய் விடுகிறதோ அப்பொழுது ஒரு தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்கு பகவான் வர வேண்டியிருக்கிறது. ஸ்ரீமத் மூலமாக நீங்கள் தனக்காகவே சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தந்தைக்குச் சமமாக அன்புக் கடலாக ஆக வேண்டுமே தவிர துக்கக் கடலாக அல்ல. தந்தைக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் எந்த காரியமும் செய்யக் கூடாது. மிக இனிமையாக, அன்பானவர்களாக ஆக வேண்டும்.

2) யோக பலத்தின் மூலம் தூய்மையாகி பிறகு மற்றவர்களையும் ஆக்க வேண்டும். முட்கள் நிறைந்த காட்டை மலர்கள் நிறைந்த தோட்டமாக ஆக்கும் சேவை செய்ய வேண்டும். நமது இனிய பாபா தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியராகவும் இருக்கிறார் என்ற குஷியில் சதா இருக்க வேண்டும். அவரைப் போன்று இனிமையானவர் வேறு யாரும் கிடையாது.

வரதானம் : பரமாத்ம செல்லத்தை பெற்று விடக் கூடிய இப்பொழுதைய மற்றும் வருங்காலத்தின் இராஜ செல்லம் ஆவீர்களாக.

சங்கமயுகத்தில் பாக்கியவான் குழந்தைகளாகிய நீங்கள் தான் இதயராமனின் செல்லத்திற்கு பாத்திரம் ஆவீர்கள். இந்த பரமாத்ம செல்லம் கோடியில் ஒரு ஆத்மாவிக்குத் தான் பிராப்தி ஆகிறது. இந்த தெய்வீக செல்லத்தின் வாயிலாக ராஜ செல்லம் ஆகி விடுகிறீர்கள். ராஜ செல்லம் என்றாலும் இப்பொழுதும் ராஜா மற்றும் வருங்காலத்திலும் இராஜா. வருங்காலத்திற்கும் முன்ன தாக இப்பொழுது சுய இராஜ்ய அதிகாரி ஆகி விட்டீர்கள். எப்படி வருங்கால இராஜ்யத் திற்கு ஒரு இராஜ்ஜியம், ஒரு தர்மம் .. .. .. என்ற மகிமை உள்ளது. அதே போல இப்பொழுது அனைத்து கர்ம இந்திரியங்கள் மீதும் ஆத்மாவினுடைய ஒரு குடை இராஜ்ஜியம் உள்ளது.

சுலோகன்: தனது தோற்றத்தின் மூலம் தந்தையின் குணங்களை வெளிப்படுத்தக் கூடியவர்களே பரமாத்மாவின் சிநேகி ஆவார்கள்.